12th November 1965]

(எ) ஆம் எனில், அக்கோரிக்கையின்மீது என்ன முடிவு ஏற்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH :

(a) The number of persons of Indian origin who have returned to this State from Ceylon during the period from 19th October 1954 upto August 1965 is given below district wise :—

South Arcot	774
North Arcot	671
Chingleput	345
Coimbatore	195
Kanyakumari	864
Madras City	265
Madurai	2,745
The Nilgiris	7
Ramanathapuram	18,845
Salem	2,670
Thanjavur	7,379
Tiruchirappalli	12,245
Tirunelveli	35,684
Total ..	82,689

(b) None.

(c) No, Sir.

(d) Does not arise.

சாலே அமைத்தல்

* 517 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) P.W.D. நிர்வாகத்திலுள்ள குளம், ஆறுகள், வாய்க்கால் களின் கரைகளில் ரோடுகள் போடுவது சம்பந்தமாக, தஞ்சை ஜில்லா அபிவிருத்தி கௌன்ஸில் 23-10-1962-ல் நிறைவேற்றிய 217-வது தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A copy of the resolution was received. It is under consideration.

புதிய இருப்புப் பாதைகள்

* 518 கேள்வி.—திரு. தா. சின்னசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சின்ன சேலத்திலிருந்து திருச்சிக்கும் சின்ன சேலத்தி லிருந்து செங்கல்பட்டுக்கும் இருப்புப்பாதை அமைப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் முதலிட்டு கொடுக்க வேண்டும் என்று கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு ஏதேனும் செய்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[12th November 1965

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) No. The State Government have, however, recommended to the Central Government the survey for the construction of the Chinna-Salem-Chingleput railway line during the Fourth Plan period, assigning the first place in the order of priority.

நடமாடும் பல் சிகிச்சை நிலையங்கள்

*519 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை நடமாடும் பல் சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன; எந்தெந்த இடங்களில்?

(இ) அவைகளால் 1964-65-ல் சிகிச்சையளிக்கப் பெற்றவர்கள் முறையே எத்தனை பேர் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இம் மாநிலத்தில் சுற்றிவரும் பல் சிகிச்சை வண்டி ஒன்றுதான் (ஸ்கோடா) உள்ளது. அது சென்னை, அரசாங்க (பொது) மருத்துவமனையைச் சேர்ந்தது.

(இ) இரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்து ஏழு.

9-30 a.m. **திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது நடமாடும் பல்வண்டி நடமாடிக் கொண்டிருக்கிறதா ? அல்லது முடமாகியிருக்கிறதா ?

கனம் சபாநாயகர் : கேள்வியே தடுமாறிக்கொண்டிருக்கிறதே ! (சிரிப்பு)

திரு. எஸ். ஜே. ராமசாமி : அது போய்க் கொண்டிருக்கிறதா ? நின்றுபோய்விட்டதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அதற்கு இப்போது உடம்பு நிலை சரியில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சார், ஏகப்பட்ட ஸ்டாப்பை அதற்காக நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தும் அது எதற்காக முடங்கி இருக்கவேண்டும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அதற்குச் சில ஸ்பேர் பார்ட்ஸ் தேவைப்படுகின்றன. அவை செகோஸ்லோவேகியாவில் இருந்து வரவேண்டியதாக இருக்கின்றன. அதற்கு அந்நியச் செலாவணித் தேவைப்படுகிறது. அவை வந்த பிற்பாடு நடமாடும்.

திரு. ஆ. கு. சுப்பையா : உடல் நலமான பிறகு எல்லா மாவட்டத்திற்கும் சென்று வர ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசாலம் : கவனிக்கப்படும்.